2002 ஏப்ரல் 26]

8. மானியக் கோரிக்கைகள் விவாத இறுதியில் வெளியிடும் அறிவிப்புகளை அச்சிட்டு உறுப்பினர்களுக்கு வழங்குதல்

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு அமைச்சரும் துறை மானியம் முடிந்த உடனே ஏராளமான அறிவிப்புகளைக் கொடுக்கிறார்கள். அவற்றையெல்லாம் அச்சிட்டு உறுப்பினர்களுக்குக் கொடுப்பதற்குத் தலைவர் அவர்கள் ஏற்பாடு செய்யவேண்டும். ஏனென்றால், அந்த ரிப்போர்ட் 7 மாதம் 8 மாதத்திற்குப் பிறகுதான் எங்களுக்கு வருகிறது. என்ன என்ன முடிவு என்று மக்கள் பலர் கேட்கிறார்கள். ஆகவே...*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அச்சிட்டுக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும்.*

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மானியக் கோரிக்கை மீதான விவாதம் முடிகின்ற நேரத்தில் அந்தந்தத் துறை அமைச்சர் பதிலளிக்கும்போது இங்கே இந்த அவையில் தெரிவிக்கின்ற அறிவிப்புக்கள் எல்லாம் அந்த மானியக் கோரிக்கை மீதான விவாதம் முடிந்துபிறகு அச்சிடப்பட்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

திரு. ஜி. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஒவ்வொரு மானியத்தின் மீதும் மக்கள் சாசனம் என்கிற ஒரு புத்தகம் போட்டு சிற்றூராட்சிகளுக்கும், பேரூராட்சிகளுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டு வந்தது. தற்போது இது வரவில்லை. இன்றைக்கு வேண்டுமானால் வந்திருக்கலாம். இதற்கு முன்பு எந்த மானியத்திலும் வரவில்லை என்பதற்காகச் சொல்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருவது, இந்த 2 பெண் குழந்தைகளைப் பெற்றவர்களுக்கு அளிக்கக்கூடிய சலுகைகள்; மனைவியோ அல்லது கணவனோ குடும்பக் கட்டுப்பாடு செய்த பின்னாலே, ஒரு பெண் குழந்தை இறந்துவிட்டால், இன்னொரு பெண் குழந்தைக்கு அந்தச் சலுகை இல்லை என்று இந்த சமூக நலத் துறையாலே மறுக்கப்படுகிறது. அப்படி 2 பெண் குழந்தைகள் பிறந்து, தகப்பனோ அல்லது தாயோ குடும்பக் கட்டுப்பாடு செய்து இருந்தால், அவர்களுக்கும் இந்தத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.